# சாமுவேலின் இரண்டாம் புத்தகம்

## தாவீதின் வெற்றிகளும், பிரச்சினைகளும்

# “சாமுவேல்” என்று பெயர் பெற காரணம்

Read the Bible in 40 days – CHALLENGE –

- சாமுவேல் என்ற பெயருக்கு “தேவனின் நாமம்” அல்லது “ தேவன் கேட்டருளினார்” என்று பொருள்.
- எபிரேய வேதாகமத்தில் 1,2 சாமுவேலின் புத்தகங்கள் ஒரே புத்தகமாக “சாமுவேலின் புத்தகம்” என்று வைக்கப்பட்டுள்ளது.
- **Septuagint** என்று அழைக்கப்படும் கிரேக்க மொழிபெயர்ப்பில்தான் முதல் முறையாக இந்தப் புத்தகம் இரண்டு பத்தகங்களாக பிரிக்கப்பட்டது.

# ஆக்கியோனும் தகவல்களும்

- இவற்றில் எழுதப்பட்ட காரியங்களின் சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது 1, 2 சாமுவேலின் புத்தகங்கள் சாமுவேலும், நாத்தானும், காத்தும் எழுதிவைத்தவற்றை பயன்படுத்தி, தீர்க்கதரிசிகளின் குழுவை சேர்ந்த ஒருவரால் தொகுக்கப்பட்டிருக்கக்கூடும்.
- இந்த புத்தகத்தில் இடம்பெறும் முக்கிய நபர் தாவீது
- 1 சாமுவேலில் இடம்பெற்ற முக்கிய நபர்களான தீர்க்கதரிசியாகிய சாமுவேல், சவுல், அவனது குமாரன் யோனத்தான் ஆகியோர் மரித்துப்போனார்கள்.
- 2 சாமுவேலில் யோவாப், பச்சேபாள், நாத்தான், அப்சலோம் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.
- எழுதப்பட்ட காலம்: கிமு 960-க்குப் பின்
- அதிகாரங்கள் : 24
- வசனங்கள் : 695

# வரலாற்றில் இந்த புத்தகத்தின் இடம்

- 1 சாமுவேல் புத்தகம் சுமார் 100 ஆண்டு கால வரலாற்றை சொல்லுகிறது.
- 2 சாமுவேல் புத்தகம் மேலும் 40 ஆண்டு கால வரலாற்றை சொல்லுகிறது.
- சவுலும், யோனத்தானும் மரித்த நிகழ்வோடும், தாவீது ஜனங்கனை தொகையிட்டு அதற்காக கர்த்தரிடத்தில் தண்டனை பெற்ற நிகழ்வோடும் ஆரம்பிக்கிறது.
- தாவீதின் 40 ஆண்டுகால ஆட்சியில்
- எப்ரோனிலிருந்து யூதாவை ஆட்சி செய்தது 7½ ஆண்டுகள்
- எருசலேமிலிருந்து யூதாவையும், இஸ்ரவேலையும் ஆட்சி செய்தது 33 ஆண்டுகள்
- தாவீதின் வாழ்க்கையை குறித்து 1சாமுவேல் புத்தகம் நிறுத்திய இடத்திலிருந்து 2சாமுவேல் புத்தகம் தொடருகிறது.

# தாவீதின் வெற்றிகளும், பிரச்சினைகளும்

Read the Bible in 40 days – CHALLENGE –

**தேசத்தின் விரிவாக்கத்தையும் தனிமனிதனின் வீழ்ச்சியையும் சொல்லும் புத்தகம்**

- 1 சாமுவேல் புத்தகம் இஸ்ரவேலில் மன்னராட்சி ஆரம்பித்தை சொன்னது
- 2 சாமுவேல் புத்தகம் தாவீதின் அரசாட்சியையும், தேவனால் தெரிவு செய்யப்பட்ட தலைமையின் கீழ் இஸ்ரவேல் தேசம் விரிவுபடுத்தப்படுவதையும் சொல்லுகிறது.
- இந்தப் புத்தகத்தில் இஸ்ரவேல் தாவீதின் முழுமையான ஆளுகைக்குள் கையளிக்கப்பட்டுள்ளது சொல்லப்படுகிறது.
- கிட்டத்தட்ட இந்தப் புத்தகத்தின் அரைப்பகுதி ராஜாவாகிய தாவீதின் வெற்றிகளையும் மீதி அரைப்பகுதி அவனது தோல்விகளையும் சொல்லுகிறது.

# 2 சாமுவேலில் முக்கிய பகுதிகள் (அதி 1-10)

Read the Bible in 40 days – CHALLENGE –

1. சவுலின் வீட்டாரின் மீதான தாவீன் பெரிய வெற்றி – அதி 1-4

a. சவுலுக்காவும், யோனத்தானுக்காகவும் தாவீது துக்கித்தல் அதி 1

b. தாவீதுக்கும், இஸ்போசேத்திற்கும் இடையே யுத்தம் அதி 2-4

- முதலாவதாக யூதாவின் கோத்திரத்தார் எப்ரோனில் தாவீதை ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள் அதி 1-4
- யூதாவிற்கு தாவீது ராஜாவானபோதும் வடபகுதியான (இஸ்ரவேல்) தேவனைவிட்டு விலகி தங்கள் வழக்கத்தின்படி சவுலின் குமாரனான இஸ்போசேத்தை தங்களுக்கு ராஜாவாக தெரிந்துகொண்டார்கள்.
- மீதியான கோத்திரத்தாரும் சவுலின் உயிரோடிருந்த குமாரனாகிய இஸ்போசேத் கொல்லப்பட்ட பின்பு தாவீதை ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள் (5:1-5)
- இஸ்போசேத் கொல்லப்பட்ட பின்பு வடக்கில் இருந்த கோத்திரத்தார்கள் தாவீதை முழு தேசத்தையும் ஆளும்படி கேட்டுக்கொண்டார்கள்.
- தாவீது புதிய தலைநகர் பட்டணமாக எருசலேமை உருவாக்கி ஒரு சோகமான நிகழ்விற்கு பின்பதாக தேவனுடைய பெட்டியை அதற்குள் கொண்டுவந்தான்.

# 2 சாமுவேலில் முக்கிய பகுதிகள் (அதி 1-10)

Read the Bible in 40 days – CHALLENGE –

## 2. தாவீதின் வலிமையான ஆட்சி அதி 5-7

a. தாவீது இராஜ்யத்தை ஒன்றுபடுத்துதல் அதி 5

b. தாவீது தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குள் கொண்டுவருதல் அதி 6

c. தாவீதுக்கு தேவன் கொடுத்த பெரிய வாக்குத்தத்தம் அதி 7

- தாவீதின் தலைமைத்துவம் தீர்க்கமானதாகவும், செயல் நிறைந்ததாகவும் இருந்தது
- எபூசியர்களிடம் இருந்த எருசலேமைக் கைப்பற்றி அதை இராஜதானி பட்டணமாகவும் அவனது குடியிருப்பாகவும் மாற்றினான் (5:6-13)
- சிறிது காலத்திற்கு பின்பு அபினதாபின் வீட்டிலிருந்த தேவனுடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டுவந்ததினால் தன்மீதும், தேசத்தின் மீதும் ஆளுகை செய்கிறவர் தேவனே என்பதை வெளியரங்கமாக அங்கீகரித்தான் (அதி 6; சங் 132:3-5)
- தாவீதின் ஆளுகையின் கீழ் தேவன் தேசத்தை செழிக்கச் செய்தார்.
- தேவன் வாக்குப்பண்ணியபடியே எதிரிகளை முறியடித்தான் (ஆதி 15:18-21 பார்க்கவும்)

# 2 சாமுவேலில் முக்கிய பகுதிகள் (அதி 1-10)

**3. தேவனுடைய எதிரிகள் மீதான தாவீதின் பெரிய வெற்றி அதி 8-10**

a. தாவீது மோவாப்பையும், பெலிஸ்தியாவையும், சோபாவையும், சீரியாவையும் தோற்கடித்தல் அதி 8

b. தாவீது மேவிபோசேதிற்கு கருணை காட்டுதல் அதி 9

c. தாவீது அம்மோனிய, சீரிய கூட்டணியை தோற்கடித்தல் அதி 10

Read the Bible in 40 days – CHALLENGE –

# தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதன்

"பின்பு சவுலைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்". அப்.13:22

1. தாவீது கர்த்தரை நேசித்தான் - அவரை ஆராதித்தான்

எருசலேமுக்குள் தேவனுடைய பெட்டியை கொண்டுவருகையில் ராஜாவாகிய தாவீது "தன் முழுப்பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்" 2சாமு 16:14-21

2. தாவீது கர்த்தரை நம்பி அவரிடத்தில் விசாரித்தான்

1வது விசாரிப்பு: கேகிலாவைக் குறித்து 1சாமு 23:1-3

2வது விசாரிப்பு: தாவீது கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின்தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா என்று கேட்டான். 1 சாமு 30:8-9

3வது விசாரிப்பு: தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான் 2சாமு 2:1-2

4வது விசாரிப்பு: பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது 2சாமு 5:17-21

5வது விசாரிப்பு: பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கி னார்கள். தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, 2சாமு 5:22-25

6வது விசாரிப்பு: தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது; அப்பொழுது தாவீது கர்த்தருடைய சமுகத்தில் விசாரித்தான். 2சாமு 21:1

# தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதன்

3. தாவீது தன்னை தாழ்தினான், மனம்வருந்தினான்

- மிகப் பாரதூரமான பாவத்தை தாவீது செய்திருந்தபோதும் அவன் தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்தி மனம்வருந்தினான் சங் 51
- ஜனங்களை தொகையிட்ட பாவத்திற்காக மனம்வருந்தினான் 2சாமு 24:14-17

4. தாவீது மனதுருக்கமும், தாராள குணமுள்ளவனாயுமிருந்தான்

- யோனத்தானின் குடும்பத்தை பாதுகாப்பதாக வாக்களித்திருந்தான் 1சாமு 20:15-16
- பின்னாட்களில் மீந்திருக்கிற சவுல், யோனத்தான் குடும்பத்தாருக்கு தான் எந்தவிதத்தில் உதவிசெய்யலாம் என்ற விசாரித்தான்(வச1) அவ்வாறே செய்தான் (வச11-12) 2சாமு 9:1-13

Read the Bible in 40 days CHALLENGE

# சொந்த வாழ்க்கையின் வீழ்ச்சி

தாவீதின் அநேக மனைவிகள்

1. மீகாள் - சவலின் குமாரத்தி (1சாமு 18:27)
2. யெஸ்ரயேல் ஊராளான அகினோவாம் (1சாமு 25:43)
3. கார்மேல் ஊராளான அபிகாயில் (நாபாலின் முன்னாள மனைவி) (1சாமு 25:42)
4. கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் (2சாமு 3:3)
5. ஆகீத் (2சாமு 3:4)
6. அபித்தால் (2சாமு 3:4)
7. எக்லாள் (2சாமு 3:5)
8. எலியாமின் மகளான பத்சேபாள் (2சாமு 12:24)

மேலும் பல மறுமனையாட்டிகளும் இருந்தார்கள் (1நாளா 3:9)

1 நாளா 3:1-4

- தாவீதின் முதல் 7 மனைவிகளும் எப்ரோனில் 6 பிள்ளைகளை பெற்றார்கள்
- 8வது மனைவியான பத்சோபள் எருசலேமில் 1வது குமாரனின் இறப்பிற்கு பின்பதாக 4 குமாரர்களை பெற்றாள்
- மற்ற மனைவிகள் மேலும் 9 குமாாரர்களை பெற்றார்கள்
- தாவீதிற்கு பிறந்தவர்கள் - 19 குமாரர்களும், பல குமாரத்திகளும் (குமாரத்திகளில் ஒருத்தி தாமார்)
- முதலாவது தாவீது திருமணமான பெண்ணான பத்சேபாளுடன் விபச்சாரப் பாவத்தில் ஈடுபட்டான். அவள் கர்ப்பவதியானாள்.
- இது பல காரியங்களுக்கான தொடக்கமாகி தாவீதின் குடும்பம் சீட்டுக்கட்டுப்போல சரிந்தது.
- தாவீது பாவத்திற்காக மனம்வருந்தியதை சங் 51 சொல்லுகிறது. ஆனாலும் பாவத்தின் விளைவுகள் தொடர்ந்தன.

# குடும்ப வாழ்க்கையின் வீழ்ச்சி

அதிகாரங்கள் 11முதல் 24வரை இராஜாவாகிய தாவீதின் ஆட்சிக்காலத்தில் அவன் செய்த பாவங்களையும் அவை தேசத்தை எவ்வாறு பாதித்தது என்பதையும் பார்க்கிறோம்.

- தாவீதிற்கு பிறந்த குழந்தை மரித்தல் 2சாமு 12:18
- தாவீதின் குமாரனாகிய அம்னோன் அவனது சகோதரனால் கொல்லப்படுதல் 2சாமு 13:21-38
- தாவீதின் குமாரத்தியாகிய தாமார் கற்பழிக்கப்படுதல் 2சாமு 13:14
- தாவீதிற்கு எதிராக அவனது பாசத்திற்குரிய குமாரன் அப்சலோம் எழும்பி அரசாட்சிக்கு எதிராக சூழ்ச்சி செய்தல் அதி 14-19
- தாவீது குறிப்பிட்ட காலம்வரை அரசாட்சியை இழத்தல்
- தாவீதின் குமாரன் அதோனியா அவனது சகோதரன் சாலொமோனால் கொல்லப்படுதல்
- தாவீது பத்சேபாளோடு விபச்சாரம் செய்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ததால் இவைகள் சம்பவித்தது
- இந்த பாவத்திற்கான தண்டனை: “பட்டயம் என்றென்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்”. “உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும்” 2சாமு 12:10-15
    - அம்னோன் தாமாரை கற்பழித்தான்
    - அப்சலோம் அம்னோனைக் கொன்றான்
    - சாலொமோன் அதோனியாவை கொன்றான்

# 2 சாமுவேலில் முக்கிய பகுதிகள் (அதி 11-24)

Read the Bible in 40 days – CHALLENGE –

- தாவீது விபச்சாரம் செய்தலும் கொலை செய்தலும் அதி 11
- தாவீதின் மீது தேவனின் நியாயத்தீர்ப்பு 12:1-23
- சாலொமோனின் பிறப்பு 12:24-25
- அம்மோனியர்களின் தோல்வி 12:26-31
- தாமாரின் கற்பழிப்பும், அம்னோனின் மரணமும் அதி 13
- சேபாவின் எதிர்ப்பு அதி 20
- மூன்று ஆண்டுகள் பஞ்சம் 21:1-14
- பெலிஸ்தர்களின் தோல்வி 21:15-22

தாவீதின் பெரிய விசுவாசம், பெரிய பலம், பெரிய பாவம் (அதி 22-24)

a. பெரிய விசுவாசம்: தாவீதின் துதியின் சங்கீதம் 22:1-23:7
b. பெரிய பலம்: தாவீதின் பராக்கிரமசாலிகள் 23:8-39
c. பெரிய பாவம்: ஜனங்களை தொகையிட்டதினால் உண்டான தண்டனை அதி 24